சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.198/2018

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பிரபாகர் | வயது | 42 |
| த/பெ | மாணிக்கராஜ் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | ஆலங்கொம்பு | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | வியாபாரம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 9 ல் 1.37 ஏக்கரில் 87 செண்ட் நிலத்தை 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் மாதைய கவுடர் என்பவருக்கு வாதி கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். அது தொடர்பான மற்ற பரிவர்த்தனைகள் குறித்தும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 11 ல் குறிப்பிட்டு உள்ள பாகப் பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி தான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 12 ல் கூறியவாறு பாகப் பிரிவினை பத்திரத்தில் எனக்கு நேரடியாக தொடர்பு கிடையாது என்றால் சரி தான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு இடையே நடைபெற்ற ஆவண பரிமாற்றங்கள் புல எண்.747 மற்றும் 748 ல் உள்ள பாதை உரிமை பற்றி அவர்களுக்குள் என்ன எழுதி கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரி தான். புல எண்.747 மற்றும் 748 ல் உள்ள பாதையில் காலம் காலமாக சென்று வந்ததாக

குறிப்பிட்டு உள்ளேன் என்றும். ஆனால் எவ்வளவு காலம் என குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரி தான். ஆனால் 100 வருடங்களாக இருக்கும். எனக்கு 43 வயது ஆகிறது. தாவா பூமியை நான் வாங்கி 12 ஆண்டுகள் இருக்கும். 12 வருடங்களுக்கு முன்பு நடந்தவற்றை எனக்கு கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரி தான். நான் கேள்விப்பட்டதாக சொல்வதும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. எனது நிரூபண வாக்கு மூலத்தில் பத்தி 14 ல் சொல்லி உள்ள பரிவத்தனைகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி தான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 15 ல் கூறி உள்ள பரிவர்த்தனைகளுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி தான். எனது நிரூபண வாக்கு மூலத்தில் பத்தி 16 ல் கூறி உள்ள 20 வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயங்கள் கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரி தான். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றும். வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. எனது நிரூபண வாக்கு மூலத்தில் பத்தி 17 ல் கூறி உள்ள 20 வருடங்களுக்கு முன்பு நடந்த விஷயங்கள் கேள்விப்பட்டு தான் தெரியும் என்றால் சரி தான். எனது நிருபண வாக்கு மூலத்தில் பத்தி 18 ல் வாதி பிரதிவாதியை மிரட்டினார் என்று கூறி உள்ள விபரம் பற்றி எனக்கு நேரில் தெரியாது. எனது நிருபண வாக்கு மூலத்தில் பத்தி 19 ல் வாதி பிரதிவாதியை மிரட்டினார் என்பதும் அவர்களுக்குள் என்ன நடந்தது என்பது பற்றியும் எனக்கு நேரில் தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 20 ல் பிரதிவாதிகளைப் பற்றி கூறி உள்ள விஷயங்களுக்கும் எனக்கும் நேரடி தொடர்பு இல்லை என்றால் சரி தான். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 21 ல் சொல்லி உள்ள கிரைய ஆவணங்களுக்கும்

எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரி தான். 6 ஆம் பிரதிவாதி தான் எனக்கு 19.10.2020 அன்று கிரையம் கொடுத்தார் என்றால் சரி தான். அந்த கிரைய பத்திரம் புல எண்.748 ல் உள்ள சொத்தை பொறுத்தது என்றால் சரி தான்.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது )

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா. கெங்காராஜ்.
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.